**செய்தி வெளியீடு எண்: 505** **நாள்: 29.07.2018**

**சேலத்தில் நடைபெறும் அரசு பொருட்காட்சியில்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்களின் உரை (29.7.2018)**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

சேலம் அரசு பொருட்காட்சி தொடக்கவிழா மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்குகின்ற சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்புமிக்க தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்
**திரு. கடம்பூர் ராஜு அவர்களே!**

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு வரவேற்புரையாற்றிய செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் **முனைவர் பொ.சங்கர் அவர்களே!**
மற்றும் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்
**திரு. வி.பன்னீர்செல்வம்** அவர்களே!
நாமக்கல் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர்
**திரு. பி.ஆர். சுந்தரம்** அவர்களே!
மேட்டூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்
**திரு.செ.செம்மலை** அவர்களே!
சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்
**திரு. கோ. வெங்கடாசலம்** அவர்களே!
சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்
**திரு. ஏ.பி.சக்திவேல்** அவர்களே!
வீரபாண்டி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்
**திருமதி பி.மனோன்மணி** அவர்களே!

சங்ககிரி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்
**திரு. எஸ்.ராஜா** அவர்களே!
ஓமலூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்
**திரு. எஸ்.வெற்றிவேல்** அவர்களே!
ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்
**திரு. ஆர்.எம்.சின்னதம்பி** அவர்களே!
கங்கவல்லி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்
**திரு. அ.மருதமுத்து** அவர்களே!
ஏற்காடு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்
**திருமதி கு.சித்ரா** அவர்களே!

தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி தலைவர்
**திரு. ஆர்.இளங்கோவன்** அவர்களே!

மற்றும் நிகழ்ச்சியிலே பங்கு பெற்று
நன்றியுரை ஆற்ற இருக்கின்ற சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் **திருமதி. ரோஹிணி அவர்களே!**
சேலம் மாநகராட்சி ஆணையாளர்
**திரு. ரெ.சதீஷ்** அவர்களே!
முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் **எம்.செல்வராஜ் அவர்களே!**
முன்னாள் மேயர் **சவுண்டப்பன் அவர்களே!**
முன்னாள் துணை மேயர், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்
**திரு.நடேசன் அவர்களே!**

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
வருகை தந்திருக்கின்ற கழகத்தின் முன்னோடி நிர்வாகிகளே, அரசு அலுவலர்களே!
உள்ளாட்சிஅமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகளே!
கூட்டுறவு சங்க நிர்வாகிகளே அரசு அலுவலர்களே!

கழகத்தில் பல்வேறு பொறுப்புக்களில் இருக்கின்ற நிர்வாகிகளே அரசு அலுவலர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே!
நலத்திட்ட உதவி பெறுகின்ற நண்பர்களே அரசு அலுவலர்களே!
தாய்மார்களே,
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!
உங்கள் அனைவருக்கும் என் முதற்கண்
எனது நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும்
ஒவ்வொரு சிறப்பு உள்ளது.
சேலம் மாவட்டத்திற்கென்று தனிச் சிறப்பு உண்டு.
பல தொழில்கள் நடைபெறும் ஒரு கதம்ப மாவட்டம்தான்
சேலம் மாவட்டம்.
இங்கு விவசாயம் முதன்மையான தொழிலாக நடைபெற்றாலும்
சிறு, குறு தொழில்களும்,
இரும்பு மற்றும் டெக்ஸ்டைல்ஸ் தொழில்களும்
அதிகமாக நடைபெறுகின்றன.
உடல் உழைப்பை மட்டுமே நம்பி வாழ்கின்ற மக்கள் சேலம் மாவட்ட மக்கள்.
சேலம் மாவட்டத்தின் வலிமையும்,
எனக்கு நன்றாகத் தெரியும். அதன் வளமையும்
எனக்கு நன்றாகத் தெரியும்.

காரணம், நான் இந்த மண்ணில் பிறந்து வளர்ந்தவன்
இந்த மண்ணின் மகிமை எனக்குத் தெரியும்.
உழைத்து வாழும் உங்களோடு நானும் உழைத்து வளர்ந்ததால்

உங்கள் அனைவரின் ஆசியோடும், இறை  அருளோடும்.
என்னை வளர்த்து ஆளாக்கிய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடும்,
இன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக உங்கள் முன்னால் நிற்கின்றேன்.  உங்களுக்கு சேவை செய்ய நிற்கிறேன்.

நான் இந்த நிலைக்கு  உயர
எனக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும்,
என்னை நம்பி எனக்கு பலமுறை வாக்களித்து
சட்டமன்றத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் அனுப்பி வைத்த மக்களாகிய உங்களுக்கும் நான் என்றைக்கும் நன்றி கடமைப்பட்டவன்.

சேலத்து மக்கள்,
இங்கு கிடைக்கும் மாங்கனியை விட இனிமையானவர்கள்.
இங்கு உற்பத்தியாகும் இரும்பை விட உறுதியானவர்கள்.

அதனால்தான் நம் தலைவர்களும், கலைஞர்களும்
இந்த சேலம் மாவட்டத்தில் முதன்முதலாக
சினிமா படப்பிடிப்பு நிலையங்களையும்,
தொடக்க காலங்களில் அரசியல் கூட்டங்களையும்
நடத்தியிருக்கின்றார்கள் என நான் நம்புகிறேன்.

சேலத்து மக்கள்
நம்பியவர்களை ஒரு காலமும் கைவிடுவதில்லை.
நம்பியவர்களுக்காக உயிர், பொருள், உழைப்பு அத்தனையும் கொடுக்க துணிபவர்கள்.
குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்  கோட்டையாக சேலம் மாவட்டம் விளங்கி வருகிறது.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், மாண்புமிகு புரட்சித் தலைவி
அம்மா ஆகியோர் மீது
சேலத்து மக்கள் வைத்த நம்பிக்கைதான்
ஒரு சாதாரண தொண்டனாக இருந்த என்னை
தமிழ்நாட்டின் முதலமைச்சர் நிலைக்கு உயர்த்தியிருக்கிறது.

அதற்காக நான் என் உள்ளத்தில் குடியிருக்கும்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும்,
என் பாசத்திற்குரிய உங்கள் அனைவருக்கும்
இந்த இனிய வேளையில் நன்றியை தெரிவித்துக்
கொள்கிறேன்.

ஒரு கருத்தை மட்டும்
நான் இங்கே பதிவு செய்து கொள்ள விரும்புகின்றேன்.
சேலத்து மக்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் எது தேவை,
எது தேவையில்லை,
எது நீண்ட கால பயனளிக்கக் கூடியது,
எது தீங்கிழைக்கக்கூடியது என்பதை
நான் நன்கு உணர்ந்தவன்.

சில தலைவர்கள் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய இளைஞரணியைச் சேர்ந்தவர், நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய அன்புமணி ராமதாஸ் அவர்கள் மத்திய அமைச்சராக இருந்தபொழுது, இந்த மண்ணுக்கோ, இந்த மக்களக்கோ என்ன செய்தீர்கள் ? என்ன திட்டங்களைத் தந்து இந்த மக்களை வளர்த்தீர்கள், இந்த மக்களைக் கொண்டு நீங்கள் வளர்ந்தீர்களே தவிர, உங்களைக் கொண்டு இந்த மக்கள் வளர்ந்தார்களா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, சமுதாயத்தைச் சேர்ந்த
தாராள குணம் கொண்ட கொடையாளிகள்,
பல்வேறு அறச் செயல் நோக்கங்களுக்காக,
தமது சொத்துக்களை காணிக்கையாக வழங்கினர்.
பல நேர்வுகளில் பல்வேறு அறச்செயல் நோக்கங்களுக்காக
கொடையாக வழங்கப்பட்ட சொத்துக்கள்,
அந்த நோக்கங்களுக்காக பயன்படாமலும்,
நல்ல நிலையில் பேணி வரப்படாமலும் இருக்கின்றன.
அவ்வாறு வழங்கப்பட்ட பல சொத்துக்கள் விற்கப்பட்டும் உள்ளன. சில சொத்துக்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன.
இதனால் உயில் எழுதிய கொடையாளிகளின்
விருப்பங்கள் நிறைவேறாமல் போய்விட்டன.

இது சம்பந்தமாக பல முறையீடுகள்
அரசுக்கு வரப்பெற்றுள்ளன.
இதைக் கருத்தில் கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு,
மேற்படி கொடையாக வந்த சொத்துக்களை
முறையாக பாதுகாத்து, பயன்படுத்துவதற்கென
தனியாக ஒரு சட்டத்தினை சட்டமன்றத்தில் இயற்றி
மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக
அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
இச்சட்டம் நடைமுறைக்கு வரும்போது,
ஒரு நிர்வாகக் குழுமம் உருவாக்கி,
அதன் மூலம் மேற்படி கொடையாளர்களின்
எண்ணங்கள் ஈடேறும் வகையிலும்,
வன்னியர்குல சத்திரிய ஏழை, எளிய மக்களின்
கல்வி மற்றும் பல்வேறு வகையிலான முன்னேற்றத்தினை உறுதி செய்யும் என்று கூறிக் கொள்கிறேன்.

வன்னியர் குல இனத்தின் நலம் விரும்பியாக விளங்கிய
மரியதைக்குரிய ராமசாமி படையாச்சி அவர்களுக்கு

மாண்புமிகு அம்மாவின் அரசு தான்
மணி மண்டபம் எழுப்பி சிறப்பு சேர்த்திருக்கிறது
என்பதைக் கொண்டே, யாருக்கு வன்னியர் குல
மக்களின் மீது அக்கறை இருக்கிறது என்பதை
புரிந்து கொள்ளுங்கள். உண்மையிலேயே,
இவர்களுக்கு வன்னியர் குல மக்கள் மீது
அக்கறையும், ராமசாமி படையாச்சி அவர்கள் மீது
மரியாதையும் இருக்குமேயானால்,
மணி மண்டபம் அமைத்ததற்காக எங்களுக்கு
நன்றியை தெரிவித்திருப்பார்கள்.
அதை அவர்கள் தவிர்த்தது எதனால் **?**
அதை அவர்களிடம் கேட்டு நீங்கள் தான்
பதில் சொல்ல வேண்டும்.

எனவே, வன்னியர் குல மக்களின் நலனில்
மாண்புமிகு அம்மாவின் அரசுக்குத் தான்
அதிக அக்கறை இருக்கிறது என்பதை
நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவருடைய பிறந்தநாள்
விழாவை அரசு விழாவாக அறிவித்ததும் அம்மாவினுடைய
அரசு தான்.

சேலம் பொருட்காட்சியில் தொடர்ந்து கலந்து கொள்ளும்
வாய்ப்பு எனக்கு கிடைக்கப் பெற்றதை நினைத்து
நான் பெருமைப்படுகிறேன்.

நான் இதை எதற்காக சொல்கிறேனென்றால், சிலபேர் வேண்டுமென்றே அரசியல் காரணத்திற்காக, அரசியல் லாபம் தேடுவதற்காக, விளம்பரம் தேடுவதற்காக சில பல கூட்டங்களிலே இந்த அரசைப் பற்றியும், என்னைப் பற்றியும் விமர்ச்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காகத்தான், இந்த

விழாவின் வழியாக இதை நான் தெரிவித்தேன். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவும் சரி, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரும் சரி, இப்பொழுது அம்மா மறைந்த பிறகு அம்மாவின் அரசும் சரி, வன்னியர் குல மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை வழங்கும் என்பதை ஆணித்தரமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

1977ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பேற்ற அடுத்த ஆண்டே,
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தொடங்கி வைத்த முதல் பொருட்காட்சி
இந்த சேலம் பொருட்காட்சிதான். ஆகவே, அந்த சிறப்புமிக்க பொருட்காட்சியை முதன்முதலாக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.அவர்கள் தான் 1977 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் துவக்கி வைத்தார்.

மாண்புமிகு அம்மா அரசின் ஓராண்டு சாதனையை விளக்கி 1000 தொண்டர்களுடன் மதுரையில் சைக்கிள் பயணம் மேற்கொள்ளப்பட்டது. அந்த பயணம் மக்களிடையே இன்று மகத்தான எழுச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு அம்மாவின்அரசு மீது அள்ளி வீசுகின்ற புகார்கள் எல்லாம் பொய் என்பதை மக்கள் புரிந்து கொள்ளும் அளவிற்கு ஓராண்டு சாதனையை மக்களிடம் கொண்டு சென்றிருக்கிறார்கள்.

அதைப்போலத் தான், இந்தப் பொருட்காட்சிகளும்

பொய் பிரச்சாரங்களுக்கு முற்றுப்புள்ளி
வைத்துக் கொண்டிருக்கின்றன,

பொருட்காட்சி என்பதை பொழுதுபோக்காக யாரும்
நினைத்துவிடக் கூடாது. இது அரசுக்கும் மக்களுக்கும்
நடுவில் உள்ள இடைவெளியை நிரப்புகின்றன, பாலமாக
இருக்கின்றன.

நேரடியாக ஒரு நிகழ்ச்சியைப் பார்ப்பதன் மூலம்,
அந்த நிகழ்ச்சி மக்கள் மனதில் எளிதில் பதியும்.
செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் மூலம் நடத்தப்படும்
அரசுப் பொருட்காட்சிகளால், அரசின் திட்டங்கள், சாதனைகள்
மற்றும் செயல்பாடுகளை மக்கள் நேரடியாக
எளிதில் அறிந்து கொள்ள இயலும்.
மாவட்டங்களில் நடைபெறும் பொருட்காட்சிக்கு
பொதுமக்கள் குடும்பத்துடன் வருகை தந்து, கண்டுகளித்து
பயன்பெறவும், விழாக் காலங்கள் மற்றும் விடுமுறை நாட்களில்
மாவட்ட தலைநகரங்களில் பொருட்காட்சிகளை நடத்தினால்,
பெரிதளவில் மக்கள் வருகை தந்து பயன் பெற்றிட
ஏதுவாக இருக்கும் என்ற அடிப்படையில்,
அரசுப் பொருட்காட்சிகள் மாவட்டம் தோறும்
நடத்தப்பட்டு வருகின்றன.

இதுவரை சேலத்தில் 35 அரசுப் பொருட்காட்சிகள்
நடத்தப்பட்டுள்ளன.

1978ஆம் ஆண்டு முதல், தமிழ்நாட்டில் இதுவரை
மொத்தம் 194 அரசுப் பொருட்காட்சிகள்
நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

195–வது அரசுப் பொருட்காட்சி 20.6.2018 அன்று
திருநெல்வேலியில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

அரசுப் பொருட்காட்சிகளில்,
முன்னர் 15 அரசுத் துறைகள்தான் பங்கேற்றன.
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
மேலும் 12 அரசுத் துறைகள் பங்குபெற ஆணையிட்டதன்
விளைவாக, தற்போது 27 அரசுத் துறைகள்
பொருட்காட்சிகளில் பங்கு பெற்று பெற்று சிறப்பிக்கின்றன.

அரசுப் பொருட்காட்சிகளில் பங்கேற்கும்
ஒவ்வொரு அரசுத் துறைக்கும்
அரங்கு அமைப்பதற்கு வழங்கப்பட்டுவந்த
66 ஆயிரம் ரூபாய் நிதி, 12.4.2017 முதல்,
70 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,
தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்,
தமிழ்நாடு கிராம கைத்தொழில் வாரியம்,
கோ–ஆப்டெக்ஸ், ஆவின், தாட்கோ,
சேலம் மாநகராட்சி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
தமிழ்நாடு உப்பு நிறுவனம் போன்ற அரசு சார்பு நிறுவனங்களும்
37 அரங்குகளில், அரசுப் பொருட்காட்சிகளில்
பங்கேற்கின்றன.

தமிழ்நாட்டில், ஆண்டுதோறும்
10 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.
அனைத்து மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில்,
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்

நல்லாசியோடு, கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஆறு மாவட்டத் தலைநகரங்களில் ஒவ்வொரு ஆண்டும் அரசுப் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது.
மேலும், ஏனைய மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில் ஆண்டுதோறும் சுழற்சி முறையில் 4 மாவட்டங்களில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

புதுடெல்லியில் 2014ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில், பொங்கல் விழாவினைச் சித்தரிக்கும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் வடிவமைக்கப்பட்ட அலங்கார ஊர்தி அகில இந்திய அளவில் இரண்டாம் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

புது தில்லியில், 2016ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில், நீலகிரி மாவட்டத்தில் வசித்துவரும் “தோடர்கள்” என்ற மலைவாழ் பழங்குடி இனத்தினரைக் குறிக்கும் வகையில் அலங்கார ஊர்தி வடிவமைக்கப்பட்டு, பங்கேற்றது.

2017ஆம் ஆண்டின் குடியரசு நாள் விழா அணிவகுப்பில் நாட்டுப்புறக் கலையான கரகாட்டத்தை விளக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் அலங்கார ஊர்தி அகில இந்திய அளவில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப்பேரணி விழாவில், இந்திய துணைக் கண்டத்தின் ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை

வலியுறுத்தும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்ந்து பங்கேற்று வருகிறது.
2012 முதல் 2017ஆம் ஆண்டு வரை நடைபெற்ற மலர்ப்பேரணி விழாக்களில், தமிழ்நாடு அரசு பங்கேற்று தொடர்ந்து முதல் பரிசு பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் நடைபெற்று வரும் இந்த  அரசால், நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம்பெறும் வகையில், 2018–19ஆம் ஆண்டிற்கான செய்தி மற்றும் விளம்பரத் துறையின் மானியக்கோரிக்கையின்போது, அரசுப் பொருட்காட்சியில் நடத்தப்படும் விழிப்புணர்வு  நாடகங்களுக்கான மதிப்பூதியம், 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, தற்போது இந்த உயர்த்தப்பட்ட மதிப்பூதியத்தினை நலிந்த கலைஞர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பொருட்காட்சிப் பிரிவின் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்படும் அரசுப் பொருட்காட்சிகளில், மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் நடைபெறும் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை பொதுமக்களுக்கு எளிதில் விளக்கும் வகையில் பொருட்காட்சிப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிநவீன மின்னணு விளம்பர வாகனம் என்னால் இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக துவக்கி வைக்கப்பட்டதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

இன்றைக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர், சட்டமன்ற

உறுப்பினர்களெல்லாம், இந்த ஆட்சியிலே என்ன திட்டங்களை கொண்டு வந்திருக்கின்றார்கள், இந்த மக்களுக்கு என்ன நன்மை செய்திருக்கின்றார்கள் என்று கேள்வி கேட்கின்றார்கள், அவர்களுக்கு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக பதிலளிக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசால் இன்று வரை **22** ஆயிரத்து **224** கோடியே **30** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் **40**ஆயிரத்து **909** பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. **16**ஆயிரத்து **641** கோடியே **94** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் **7** ஆயிரத்து **595** பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன. ஆக மொத்தம் **38** ஆயிரத்து **866** கோடியே **24** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் **48** ஆயிரத்து **504** பணிகள் நடைபெற்று வருகின்றன. அதே அம்மாவின் அரசினுடைய சாதனை என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

மக்களுக்கான நலப்பணிகள் விரைவாகவும், உரியமுறையிலும் சென்றடைவதை முதன்மை பணியாகக் கொண்டு நான் ஓய்வின்றி தொடர்ந்து செயல்பட்டு வருவதன் காரணமாக இன்று வரை **8** ஆயிரத்து **107** கோப்புகள் பார்த்து ஒப்புதல் வழங்கயுள்ளேன் என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதன் மூலம் பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, அனைத்துத்தர மக்களும் பயன்பெறும் வகையில் வீட்டுவசதித் திட்டங்கள், வேளாண் மக்களுக்கான திட்டங்கள், ஏழை மக்கள் உயர்தர சிகிச்சைப் பெற சுகாதார திட்டங்கள், மக்களின் போக்குவரத்து எளிதாக்கும் சாலை வசதிகள், புதிய பேருந்துகள், நெசவாளர்களின் முன்னேற்றத்திற்கான பல திட்டங்கள் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த,
மாண்புமிகு அம்மாவின் அரசு,
அனைவருக்கும் தரமான கல்வியை அளிப்பதற்கு
உறுதி பூண்டுள்ளது. அதனை நிறைவேற்றும் வகையில்,
**2018–19–**ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில்,
பள்ளிக் கல்வித் துறைக்கு மிக அதிக அளவு ஒதுக்கீடாக
**27**ஆயிரத்து **205** கோடியே **88** லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டு, இன்றைக்கு கல்வித் துறையில் ஒரு
மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றோம்.

அதேபோல இன்றைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி
அம்மாவினுடைய ஆட்சியிலேதான், **10** வகுப்பு, **12** ஆம் வகுப்பு
பொதுத் தேர்வில் எழுதிய **20** லட்சம் மாணவர்களுக்கு
அவர்களுடைய கைபேசி மூலமாக தேர்வு முடிவுகள்
வெளியான இரண்டே நிமிடத்தில்
குறுஞ்செய்தி மூலம் அவர்களுக்கு தகவல்
அளிக்கப்படுகின்றன.

உயர்கல்வித் துறையில், **2011** ஆம் ஆண்டு மாண்புமிக
அம்மாவின் ஆட்சிப் பொறுப்பேற்ற போது, **21 சதவீதமாக**
உயர்கல்வி படித்திருந்த மாணவர்கள் எண்ணிக்கை இருந்தது,
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சி
சிறப்பான ஆட்சி செய்ததன் விளைவாக, அம்மாவினுடைய
அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக, இன்றைக்கு
உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை **46.94**
சதவீதமாக உயர்ந்து, இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கின்ற
மாநிலத்தில் முதலிடம் தமிழகம் வகிக்கின்றது என்பதை

திருக்கிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அம்மாவினுடைய ஆட்சியிலே 4 பொறியியல் கல்லூரி, 16 பலவகைத் தொழில் நுட்ப கல்லூரிகளும் தொடங்கப்பட்டன. அதேபோல புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலேதான், எண்ணற்ற திட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

சுகாதாரத் துறைக்கு ஏராளமான திட்டங்களைக் கொண்டு வந்திருக்கின்றோம். கிராமப்புறங்களிலே வாழ்கின்ற மக்கள் சுகாதாரமாக இருக்கவேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்கள் இன்றைக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல, இன்றைக்கு விவசாயிகளுக்கு நிறைய திட்டங்களை நாங்கள் செயல்படுத்தி வருகின்றோம். இன்றைக்கு உ ணவு தானிய உற்பத்தியில் இந்தியாவிலேயே தொடர்ந்து முதலிடம் வகிக்கின்ற அரசு தமிழ்நாடு அரசு என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக உயர்ந்த விருதான க்ரிஷ் கர்மாண் விருது, தொடர்ந்து தமிழ்நாட்டிற்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஆகவே, இன்றைக்கு புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு தான் மக்களுடைய அரசு , மக்களுக்குத் தேவையான நன்மைகளை வழங்கக்கூடிய அரசு என்பதைத் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா கொண்டு வந்த திட்டம் அத்தனையையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். தாலிக்குத் தங்கம் திட்டத்தை அம்மாவினுடைய அரசு கொண்டு வந்தது. அதை சிறப்பான முறையில் நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

அதேபோல, அம்மாவினுடைய ஆட்சியிலே பசுமை வீடுகள் திட்டம், இன்றைக்கு சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோல, முதியோர் உதவித் தொகை, விலையில்லா ஆடுகள், வறட்சி நிவாரணம், விவசாயிகளுக்கு வேளாண்மைக்கு கடன் தள்ளுபடி, கூட்டுறவுத் துறையின் மூலமாக கடனுதவி, விவசாயிகளுக்கு வண்டல் வழங்கும் திட்டம், குடிமராமத்து திட்டம், பள்ளிக் கல்வித் துறையில் ஒரு மறுமலர்ச்சியை அம்மாவினுடைய அரசு இன்றைக்கு எடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இப்படி பல்வேறு திட்டங்களை தமிழ்நாட்டு மக்களுக்கு வாரி, வாரி வழங்குகின்ற அரசு அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியில்தான், கல்வியிலே ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றோம். 201–2012 முதல் 2016–2017 வரை 227 புதிய தொடக்கப் பள்ளிகள், 116 தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாகவும், 829 நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன. இதன் விளைவாக, கிராமப்புறத்தில் இருக்கின்ற ஏழை, எளிய மக்கள் தங்களுடைய குழந்தைகளை அங்கேயே கல்வி கற்பதற்கான வசதியை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கிறது. அதன் விளைவாக,

இன்றைக்கு கல்வி கற்போரின் எண்ணிக்கை தமிழகத்திலே உயர்ந்திருக்கின்றது, அதற்காக பாடுபட்ட அரசு அம்மாவினுடைய அரசு என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

உயர்கல்வியில், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 65 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் கொடுத்தார்கள். இன்றைக்கு அம்மாவினுடைய அரசு, கடந்த ஆண்டு 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைக் கொடுத்தது. அதுமட்டுமல்ல. இன்றைக்கு 41 பல்கலை உறுப்புக் கல்லூரியை அரசுக் கல்லூரிகளாக அறிவித்து, ஆண்டுதோறும் தொடர் செலவினமாக 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, வேளாண் கல்வியை உருவாக்கியிருக்கிறது. வீட்டுமனை இல்லாதவர்களுக்கெல்லாம், இலவச வீட்டுமனை பட்டாக்களை அம்மாவினுடைய அரசு வழங்கியிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு சேலம் மாவட்டம் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் எங்கெல்லாம் உயர்மட்டப் பாலம் கட்டவேண்டும் என்று கோரிக்கை வைக்கிறார்களோ, அங்கெல்லாம் உயர்மட்டப் பாலம் அம்மாவினுடைய ஆட்சியில்தான் கட்டிக் கொடுக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, அம்மாவினுடைய அரசும் எங்கெங்கெல்லாம் மக்கள் பயன்பாட்டிற்கு தேவையோ அதையறிந்து, மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக, உயர்மட்டப் பாலம், கீழ்ப்பாலம், ரயில்வே பாலங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், சேலத்திலே இதற்கு முன் எத்தனை பாலங்கள் இருந்தது, அம்மா ஆட்சிக்கு வந்தபிறகு,

நான் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக வந்தபிறகு, எவ்வளவு பாலங்கள் நம்முடைய சேலம் மாநகரத்தில் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல, சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்து ரயில்வே கடவுகளின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு ஆணையிட்ட அரசு அம்மாவினுடைய அரசு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே பல்வேறு திட்டங்களை இன்றைக்கு அம்மாவினுடைய அரசு நிறைவேற்றியிருக்கின்றது.

சேலம் தனி குடிநீர் திட்டம், **233** குடியிருப்புகளுக்கு தனி மின்விளக்கு, எடப்பாடி நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம், மேட்டூர் குடிநீர் திட்டம், எடப்பாடி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவிடி குடிநீர் திட்டம், மேச்சேரி நங்கவள்ளி குடிநீர் திட்டம், வாழப்பாடி, நரசிங்கபுரம் மற்றும் ஆத்தூர் பகுதிகளுக்கு தங்குதடையின்றி குடிநீர் வழங்கும் திட்டம், இப்படி பல்வேறு திட்டங்களை அம்மாவினுடைய அரசு அறிவித்திருக்கிறது என்பதை தெரிவித்து ஒரு சிறு கதையை இந்த நேரத்திலே உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

வாழை பயிரிடும் ஒரு விவசாயி
ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட நாளில் இறைவனுக்கு ஆயிரம் வாழைப் பழங்களைக் காணிக்கையாக செலுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.
அந்த வருடம் காணிக்கையாக செலுத்த
அவரால் கோவிலுக்குப் போக முடியவில்லை.
எனவே, தனக்குப் பதிலாக தன் கணக்குப் பிள்ளையை காணிக்கை செலுத்த அனுப்பினார்.

ஒரு மாட்டு வண்டியில்
ஆயிரம் வாழைப் பழங்களை ஏற்றிக் கொண்டு
கணக்குப்பிள்ளை கோவிலுக்குப் புறப்பட்டார்.
போகிற வழியில் சாலை ஓரத்தில் ஒரு ஏழை
மயங்கிய நிலையில் சுருண்டு கிடந்தார்.
இதைப்பார்த்த அந்தக் கணக்குப்பிள்ளை
வண்டியை நிறுத்தச் சொல்லிவிட்டு அந்த ஏழையின் முகத்தில்
நீரை தெளித்து எழுப்பிப் பார்த்தார்.
அந்த ஏழை கண்விழித்துப் பார்க்கவில்லை.
அவரது வயிறு ஒட்டிப்போய் இருந்தது.
பசி மயக்கமாக இருக்குமோ என்று எண்ணிய
கணக்குப்பிள்ளை, வண்டியிலிருந்த ஒரு வாழைப்பழத்தை
எடுத்து அந்த ஏழையின் வாயில் ஊட்டிவிட்டார்.
அவர் மெதுவாக கண்விழித்துப் பார்த்தார்.
ஆனால் எழுந்திருக்க முடியவில்லை.
மேலும் ஒரு வாழைப்பழத்தை ஊட்டினார்.
அப்போது, வண்டிக்காரன் கணக்குப்பிள்ளையிடம்,
‘முதலாளி கொடுத்தனுப்பிய வாழைப்பழம் குறைந்திருப்பதாக
கோவிலில் கூறிவிட்டால் நம் வேலை போய்விடும்’
என்று எச்சரித்தான்.
அதை கணக்குப்பிள்ளை கண்டு கொள்ளவில்லை.
இவ்வாறு ஐந்து பழங்களை சாப்பிட்ட பின்,
மயங்கிக் கிடந்த அந்த ஏழை, எழுந்து நடக்க ஆரம்பித்தான்.

வண்டி மீண்டும் புறப்பட்டது. மீதியிருந்த **995**
வாழைப்பழங்களையும் இறைவனுக்கு காணிக்கை
செலுத்திவிட்டு கணக்குப்பிள்ளை திரும்பிவிட்டார்.
அன்று இரவு முதலாளியின் கனவில் இறைவன் வந்து,
‘பக்தா, நீ எனக்கு கொடுத்தனுப்பிய ஐந்து பழங்கள்
எனக்கு வந்து சேர்ந்தன’ என்றார்.
திடுக்கிட்டு எழுந்த விவசாயி,

கோபத்துடன் கணக்குப்பிள்ளையையும், வண்டிக்காரனையும் இழுத்து வரச் சொன்னார். பயத்துடன் இருவரும் வந்தார்கள்.
‘நான் அனுப்பிய ஆயிரம் பழத்தில், ஐந்து பழம்தான் கோவிலுக்கு சென்று சேர்ந்திருக்கிறது.
மீதி பழங்களை என்ன செய்தீர்கள் **?**’ என்று கேட்டார்.
கணக்குப்பிள்ளை, நடந்த உண்மை சம்பவத்தை விளக்கமாக விவசாயியிடம் கூறினார்.
பசியோடிருந்த ஏழைக்குக் கொடுத்த ஐந்து பழங்கள்தான் நேராக இறைவனுக்குப் போய் சேர்ந்திருக்கிறது என்ற உண்மை அப்போதுதான் விவசாயிக்குத் தெரிந்தது.
ஏழைகளுக்கு செய்யும் தர்மத்தின் மகத்துவத்தை நினைத்து விவசாயி மெய்சிலிர்த்துப் போனார்.

இதைப்போலத் தான் ஏழைகளுக்கு செய்யும் நற்பணிகள்தான் இறைவனுக்கு செய்யும் காணிக்கையாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நினைத்து, ஏழைகளுக்காகவே திட்டங்கள் தீட்டினார்கள்.
அதே வழியைத்தான்,
மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசும் பின்பற்றுகிறது என்பதை எங்கள் ஓராண்டு சாதனையைக் கொண்டே நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள்.

இன்றைக்கு பெங்களூருவைச் சேர்ந்த
‘**பொது விவகாரங்கள் மையம்**’ என்ற ஒரு அமைப்பு,
சமூக – பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில்
முக்கியமாக,

மாநிலத்தின் குழந்தைகள் வளர்ச்சி விகிதம்,
சட்டம்–ஒழுங்கு, தீர்ப்பு வழங்குதல்,
பொருளாதார சுதந்திரம், சுற்றுச்சூழல்,
அத்தியாவசிய உள்கட்டமைப்பு, நிதி மேலாண்மை,
பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் உள்பட
10க்கும் மேற்பட்ட காரணிகளைக் கொண்டு
மாநில அரசின் செயல்பாடுகளை
தர மதிப்பீட்டுடன் வெளியிட்டிருக்கிறது.
இதில் 2018–ஆம் ஆண்டிற்கான
அம்மையத்தின் அறிக்கையில்
தமிழ்நாடு ஆளுமையில் இரண்டாவது சிறந்த மாநிலமாக
திகழ்கிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்றது முதல்
இது வரை பல்வேறு பிரச்சனைகளில்
மக்களின் நலன் காக்கும் வகையில்
பல முக்கிய முடிவுகளை எடுத்து,
அவற்றில் வெற்றி கண்டுள்ளது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, இப்படி பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதன்
மூலமாகத்தான் நமக்கு இந்த இரண்டாம் இடம்
கிடைத்திருக்கின்றது. எதிர்க்கட்சி யாரும்
ஏற்றுக்கொள்ளவோ, பாராட்டவோ மாட்டார்கள்.
இருந்தபோதும், மாண்புமிகு அம்மாவின் அரசு, தமிழ்நாட்டு
மக்களுக்காக எப்பொழுதும் தன்னுடைய கடமையை
நிறைவேற்றும். தற்போதுள்ள மாண்புமிகு அம்மாவின் அரசு
மீது அரசியல் ரீதியான குற்றச்சாட்டுகள் தான் எழுகிறதே
தவிர, திட்டப்பணிகள் விரைவாக நடந்து வருகிறது என்பதை
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை,
அல்லும் பகலும் அயராது உழைத்து
அரசின் திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வை
மக்களுக்கு ஏற்படுத்தி வருகின்ற காரணத்தால்
இத்துறையைச் சார்ந்த அனைவருக்கும்
நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசுப் பொருட்காட்சி இத்தனை சிறப்பாக
நடைபெறுவதற்கு உழைத்த, மாவட்ட ஆட்சித்தலைவர்
மற்றும் அலுவலர்களுக்கும், அத்தனை நல்ல
உள்ளங்களுக்கும் உளமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக்
கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இன்றையதினம் அம்மா இருசக்கர வாகனம்
கிட்டத்திட்ட 2000 மகளிருக்கு வழங்கப்படுகின்ற
நற்செய்தியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சிதான் ஏராளமான
திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறது. பல ஆண்டுகளாக,
காவிரி பிரச்சினைக்காக போராடி வந்தோம். பொன்மனச்
செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் இருந்து,
இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா காலம் வரை தொடர்ந்து
சட்டப் போராட்டம் நடத்தி வந்தோம். இருபெரும் தலைவர்கள்
கண்ட கனவை இன்றைக்கு அம்மாவினுடைய அரசு
நிறைவேற்றி வெற்றி கண்டிருக்கின்றது, அதுதான் நம்முடைய
மக்கள் செய்தித் தொடர்புத் துறையின் வழியாக விளக்கமாக
தெரிவித்தார்கள். ஆகவே, மக்களுக்கு என்ன செய்ய
வேண்டுமோ, அதை குறிப்பறிந்து செயல்படும் அரசு
அம்மாவினுடைய அரசு, திட்டமிட்டு செயல்படுகின்ற அரசு
அம்மாவினுடைய அரசு. அதனால் தான், பல்லாண்டு காலமாக

இருந்த காவிரி பிரச்சினைக்கு, ஒரு தீர்வை கண்ட அரசு அம்மாவினுடைய அரசு என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைக்கு நம்முடைய செய்தி விளம்பரத் துறை அமைச்சர், காவிரி பிரச்சினை பற்றியும், நாம் எப்படி மீட்டுக் கொண்டு வந்தோம் என்பதையெல்லாம் தெளிவாகச் சொன்னார்கள், இதையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, ஒரு அரசின் கடமை, மக்களுக்கு என்ன சாதனை செய்தது என்பதுதான். அந்த சாதனையை இன்றைக்கு நாம் செய்து காட்டியிருக்கிறோம் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு காவிரி மேலாண்மை ஆணையம், காவிரி நீர் முறைப்படுத்தும் குழு இரண்டையும் அமைத்த அரசு அம்மாவினுடைய அரசு, அதற்காக அம்மா இரவு, பகல் பாராமல் போராடினார்கள், அம்மா அவர்கள் நான்கு நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள், தனது இறுதி மூச்சு இருக்கின்றவரை காவிரிக்காக போராடினார்கள். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பொழுதுகூட, காவிரி பிரச்சினையைப் பற்றிதான் இறுதியாக பேசினார்கள். ஆகவே, ஒரு தலைவர், ஒரு முதலமைச்சர் நாட்டு மக்கள் மீது, விவசாயிகள் மீது எவ்வளவு பற்றும், பாசமும் கொண்டிருந்தார் என்பதை இதன் மூலமாக தெரிந்து கொள்ள வேண்டும். நாட்டுக்காக உழைத்தார், மக்களுக்காக உழைத்தார், அந்த மறைந்த ஒப்பற்ற புரட்சித்தலைவி அம்மாவை வணங்கி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**